**24.02.2025**

**வா.சா.1**

**திரு துரைமுருகன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் 2002 ல் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றேன். அதற்கான ஆவணமாக பாஸ்போர்ட்டை தாக்கல் செய்துள்ளேன். என்னை வளர்த்து, படிக்க வைத்து, வெளிநாட்டிற்கு அனுப்பியது எல்லாம் என் தந்தை என்றால் இல்லை. என்னை வளர்த்து, ஆளாக்கியது என் பாட்டிதான். நான் வெளிநாடு செல்லும்போது என் தந்தையார்தான் கடன் வாங்கி செலவு செய்து என்னை அனுப்பி வைத்தார் என்றால் இல்லை. வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 வரையான ஆவணங்களில் என்னால் பணம் அனுப்பப்பட்டு எனது தொகையில் சொத்து வாங்கியதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 ல் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் என் தந்தையார் ராஜேந்திரனின் சுய உழைப்பில் வரப்பெற்ற தொகையில் கிரயம் பெறப்பட்டது எனவும் அதில் என்னுடைய முதலீடோ தொகையோ கிடையாது எனவும் சொன்னால் தவறு.

நான் வெளிநாடு செல்லும் முன்பே என் தந்தையார் வெளிநாட்டிற்கு சென்று வருமானம் ஈட்டி வந்தார் என்றால் சரிதான். அதுபோல் இந்தியாவில் பிரசித்தி பெற்ற தையல் கடை வைத்து பல ஆட்களை சம்பளத்திற்கு அமைத்து வருமானம் ஈட்டியுள்ளார் என்றால் தவறு. நான் வெளிநாட்டிலிருந்து அனுப்பிய பணத்தில் என் அப்பா சொத்துக்களை வாங்கினார் என்றால் தவறு. நான் வெளிநாட்டிலிருந்து என் தந்தைக்கு அதிகார முகவர் பத்திரம் கொடுத்து அதனடிப்படையில் சொத்துக்கள் ஏதும் வாங்கப்படவில்லை என்றால் சரி. எனது தந்தையாரின் வாரிசுகளாகிய எனது தாயார், இறந்த எனது சகோதரரின் மனைவி மற்றும் குழந்தை ஆகியோருக்கு சொத்து கிடைக்க கூடாது என்பதற்காக என் தந்தையார் தேடிய சொத்துக்களை நான் தொகை கொடுத்து வாங்கினேன் என்று பொய்யாக கட்சியாடுகிறேன் என்றால் தவறு. எங்களுடைய கூட்டு குடும்ப வரவு-செலவு கணக்குகள் ஏதும் தணிக்கைக்கு உட்பட்டதல்ல என்றால் சரி. நான் தாக்கல் செய்யப்பட்டுள்ள என் தந்தைக்கு நான் எழுதிய என் தந்தை எனக்கு எழுதிய கடிதங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட கடிதங்கள் என்றால் தவறு. நான் சுயமாக தேடிய வருமானம் அனைத்தையும் என் மாமனார் ஊரில் வீடு, சொத்துக்கள், நில பலன்கள் வாங்கி வைத்துள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு சம பங்கு உண்டு என்றால் தவறு. சொத்துக்கள் அனைத்தும் என் தந்தையாரின்

உழைப்பில் தேடப்பட்டது என்றால் தவறு. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (6 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் 6 முதல் 11 பிரதிவாதிகளை பொறுத்து எந்த பரிகாரமும் கோரவில்லை. மேற்படி பிரதிவாதிகளை தேவையற்ற தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் அரசுக்கு தெரிய வேண்டும் என்பதற்காக அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். ஆவணங்கள் அனைத்தும் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தாவா சொத்துக்களை பொறுத்து சமூகம் நீதிமன்றம் இறுதியாக பிறப்பிக்கும் உத்தரவிற்கு மேற்படி பிரதிவாதிகள் ஏற்ப நடக்க தயாராக உள்ளார்கள். மேற்படி பிரதிவாதிகளை பொறுத்து தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.02.24 15:28:37 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவாரூர்.